யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 07
## First Term Examination – 2020 – Grade 07

| | | | | |
|---|---|---|---|---|
| வினாத்தாள் I,II | 33 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |

சுட்டெண் Index No

**வரலாறு**

பகுதி I

➢ மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. உலகில் மிகவும் பழமை வாய்ந்த பயிர்ச்செய்கை முறை எது?
   1)நெற்பயிர்ச்செய்கை 2)சேனைப்பயிர்ச்செய்கை
   3)தெங்குப்பயிர்ச்செய்கை 4)தேயிலைப்பயிர்ச்செய்கை

2. சேனைப்பயிர்ச்செய்கைக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
   1)மேட்டுநிலப்பயிர்ச்செய்கை 2)வயற்பயிர்ச்செய்கை
   3)சேற்றுநிலப்பயிர்செய்கை 4)காணிப்பயிர்ச்செய்கை

3. சேனைப்பயிர்ச்செய்கைக்கு கல்வெட்டில் வழங்கப்பட்ட பெயர் யாது?
   1)சாலி 2)மம்மி 3)பிட்டபிம் 4)சிகலவத்து

4. புதிய சேனை நிலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1)சாலி 2)கினியாதிகால 3)ஹெலிகடா 4)நவதெளிசேனை

5. “மின்னேரியாத்தெய்வம்” எனப்போற்றப்பட்ட மன்னன் யார்?
   1)வசபன் 2)தாதுசேனன் 3)மகாசேனன் 4)காசியப்பன்

6. புராதன காலத்தின் மூன்று போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு?
   1)கல்பொத்த 2)தோணிகல 3)பதுளை 4)மிகிந்தலை

7. மாடு வளர்ப்போர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1)ரன்கருவன் 2)கோபாலகர் 3)கும்பகார 4)பெகரா



kalvi.lk

8. உலோகத் தொழில் செய்வோர் பொதுவாக எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1)கம்மாளர்  2)லோகுரு  3)ரன்கருவன்  4)சுவர்ணகார

9. வணிகக்குழுக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1)குக  2)பட்டுண்கம  3)கம  4)புக

10. ருவன்வெலிசாயாவை அலங்கரிப்பதற்காக உரோமபுரியிலிருந்து கண்ணாடி மணிகளைப் பெற்றவர்?
   1)பண்டுகாபயன்  2)மகாசேனன்  3)பாதிகாபயன்  4)தாதுசேனன்

11. இலங்கையில் வெளிநாட்டுப் பொருட்களுக்குவரி அறவிட்ட துறைமுகம் எது?
   1)தம்பபன்னி  2)கொடவாய  3)மாதோட்டம்  4)கோகண்ண

12. உழைப்புக்கு உழைப்பை பரிமாற்றும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
   1)சித்தம்  2)மத்தம்  3)யுத்தம்  4)அத்தம்

13. சமையற்கலையில் தேர்ச்சி பெற்ற பெண்கள் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டனர்?
   1)மதுபாச்சிகா  2)சத்தர்மலங்கார  3) மகாசூலி  4)சுவர்ணகார

14. புராதனகால வர்த்தக நகரங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
   1)புக  2)அத்தம்  3)நிகம்  4)அகம்

15. பாலைப் பெறும் நோக்கில் வளர்க்கப்பட்ட பசு எவ்வாறு அழைக்கப்பட்டது?
   1)கிரிகெரி  2)அழுகெரி  3)கோபாரி  4)விகாரி

16. முதலாம்சேனன் எந்த வம்சத்தை சேர்ந்த மன்னன்?
   1)இலம்பகர்ணவம்சம்  2)மௌரியவம்சம்
   3)மானவர்மவம்சம்  4)கும்பகர்ணவம்சம்

17. இரண்டாம் சேனன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்த போது ஆட்சி செய்த மன்னன் யார்?
   1)வரகுணவர்மன்  2)ஸ்ரீமாறஸ்ரீவல்லபன்
   3)வசபன்  4)எல்லாளன்

18. அனுராதபுர இராசதானி எப்போது சோழரிடம் வீழ்ச்சியடைந்தது?
   1)கி.பி1017  2)கி.பி1027  3)கி.பி1037  4)கி.பி1037

19. சோழர்களால் பொலநறுவைக்கு வைக்கப்பட்ட பெயர் யாது?
   1)புலஸ்திநகர்  2)விஜயராஜபுரம்
   3)கலிங்கராஜபுரம்  4)ஜனநாதமங்களம்

20. மகாவிஜயபாகுவினால் உருகுணையில் தலைநகரம் தெரிவு செய்யப்பட்ட இடம் எது?
   1)கதிர்காமம்  2)பொலநறுவை  3)மகாகம  4)அம்பாந்தோட்டை




kalvi.lk

## பகுதிII

- முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

1) அ) இலங்கைப்படத்தில் குறிக்கும் எழுத்துக்களை இனங்கண்டு எழுதுக.

I. களனிகங்கை
II. திருகோணமலை
III. கண்டி
IV. காலி
V. மல்வத்துஓயா
VI. நீர்கொழும்பு
VII. மாணிக்ககங்கை
VIII. இரணைமடுக்குளம்
IX. ஊர்காவற்றுறை
X. ஆனையிறவு




(10புள்ளிகள்)

(ஆ)

i. சூடடிக்கப்பயன்படுத்தப்பட்ட இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
ii. பழைய நூல்களில் கரைநெல் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
iii. இலங்கைக்கு பௌத்தமதம் கொண்டுவரப்பட்ட போது ஆட்சி செய்த மன்னன் யார்?
iv. அநுராதபுர யுகத்தின் பின்னரைக்காலத்தில் கிராமத்தை நிர்வகித்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
v. மகாவிஜயபாகுவின் இயற்பெயர் யாது?
vi. விஜயபாகுமன்னனின் உயர்பண்பு தொடர்பாக விடயங்களைக் கூறும் கல்வெட்டு யாது?

(6×1=6புள்ளிகள்)

2)

I. புராதனகாலமக்களது வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள அடிப்படையாக அமையும் இரு விடயங்களும் எவை?
II. நெற்பயிர்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரண்டு தருக?
III. சேனைப்பயிர்ச்செய்கையின் போது இடம் பெற்ற செயற்பாடுகளைத் தருக?

(2+4+5=11புள்ளிகள் )



Education கல்வி
kalvi.lk

3)

I. இலங்கையில் காணப்பட்ட வர்த்தகத்தின் இரண்டு வகைகளையும் தருக?
II. இலங்கையில் வாழும் இனங்களும் எவை?
III. புராதன காலத்தில் மக்கள் ஒன்றிணைந்து செயலாற்றிய பொதுவேலைகள் சிலவற்றினைத் தருக?

(2+4+5=11புள்ளிகள் )

4)

1. ஆரியவம்சத்தை சேர்ந்த மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக?
2. அனுராதபுர காலத்தில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அரசுரிமை முறைகள் இரண்டினையும் தருக?
3. புராதன கல்வெட்டுகளில் எழுதப்பட்டிருந்த சட்டதிட்டங்கள் சிலவற்றைத் தருக?

(2+4+5=11புள்ளிகள் )

5)

I. மன்னன் சட்டரீதியாக பொறுப்பை ஏற்பதற்காக மேற்கொள்ளும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?
II. இலங்கை மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்திய தென்இந்திய இராட்சியங்கள் மூன்றினையும் ,அதன் தலைநகரங்களையும் தருக?
III. அனுராதபுரத்தை ஆட்சி செய்த மானவர்மவம்சத்தின் சிறப்புக்களைத் தருக?

(2+4+5=11புள்ளிகள் )

Education கல்வி අධ්‍යාපන

6)

i. மகாவிஜயபாகுவிற்கு பிள்ளைப் பருவத்தில் இருந்து உதவிய பிரபு யார்?
ii. மகாவிஜயபாகு பற்றி அறிந்து கொள்வதற்கான மூலாதாரங்கள் சிலவற்றினைத் தருக?
iii. முதலாம் விஜயபாகு மன்னனிடமிருந்து இலங்கை மக்கள் பெறக்கூடிய முன்மாதிரிகள் சிலவற்றினைத் தருக?

(2+4+5=11புள்ளிகள் )



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457